உ
சிவமயம்



அமரர்

# கலாசூரி இரத்தினதுரை சிவகுருநாதன், MA,

(முன்னாள் தினகரன் பிரதம ஆசிரியர்)

அவர்களின்

# நினைவு மலர்

## 06-09-2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# கலாசூரி இரத்தினதுரை சிவகுருநாதன்

மலர்வு

**07-10-1931**

உதிர்வு

**08-08-2003**

## திதி நிருநய வெண்பா

**சீரோங்கு சுவானு வருடச் சிறந்த ஆடித்திங்கள்**
**வேரோங்கு பூர்வபக்கத் துவாதசியில் - ஏரோர்புகழ்,**
**கந்தர்மடப் படியுரித்த மூதறிஞர் சிவகுருநாதன்**
**என்தை இறையடி கண்டான்.**

வரகவி வேலணை வேணையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவரின் சாதனைகள்

யாழ்ப்பாண கந்தர்மட வாசியும் உயர்தவ சைவ வேளான் குல திலகரும் பூநகரி செட்டிக்குறிச்சி ஸ்ரீமான் பொன்னம்பல உடையார் வழித்தோன்றலும் மட்டுவில் பாண்டிய மழவராயர் பிரபு மரபில் உதித்தவரும்.

தினகரன் முன்னாள் பிரதம ஆசிரியரும், கொழும்பு தமிழ் சங்கத் தலைவரும், கப்பித்தாவத்தை பிள்ளையார் கோவில், முகத்துவாரம் இந்துக் கோவில்களின் தர்மகத்தாவும்,

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பிரசுர வெளியீட்டுகளுக்கான குழுவின் முன்னாள் தலைவரும், இலங்கை கலைக் கழகத்தின் தமிழ் இலக்கிய குழுவின் முன்னாள் தலைவரும்,

இலங்கை பத்திரிகை சபையின் முன்னாள் தலைவரும், **Vedio Shimuzi Foundation Japan (Sri Lanka)** வழங்கிய சிறந்த பத்திரிகையாளன் சேவைக்கான விருதைப் பெற்றவரும்,

கடன் இணக்கசபை அங்கத்தவரும்,

இலங்கை பல்கலைகழகம், கொழும்பு, இலங்கை பத்திரிகைச் சபை ஆகியவற்றின் பகுதி நேர விரிவுரையாளரும்,

இலங்கை சட்டக் கல்லூரியின் சட்ட விரிவுரையாளருமான சட்டதரணியும், தனரஞ்சிதமணியின் பாசமிகு கணவரும், மாலதி, கீதா, விஷ்ணுவர்தனின் அன்புத் தந்தையும், இலக்கிய செம்மல், விஸ்வபிரசாந்தினி,

## கலாசூரி இரத்தினதுரை சிவகுருநாதன் M.A. J.P. (All Ceylon)

அவர்களது மறைவு குறித்த நினைவு மலர்.

**23, Moor Road,**
**Wellawatte,**
**Colombo - 06.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் துதி

பிடியதனுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

## தேவாரம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்னல் லஃதுறும் கழுமல பிவளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

## திருவாசகம்

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தென்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப்பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டு கொண்டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளக்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

நிட்டை யிலாவுடல் நீத்தென்னை யாண்ட
நிகரிலா வண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடியாரைச் சீராட்டுந்
திறங்களுமே சிந்தித் (து)
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக வூறும்
அமிர்தினிக்கு ஆழநிழற்
பட்டனுக்கு என்னைத் தன்பாற் பகுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்க
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தை கெடப்புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாமசுந்தரி பூங்கழல் போற்றி.

## திருப்புகழ்

இருந்தவீடும் கொஞ்சிய சிறுவரும் உறுகோளூ
இசைந்த ஊரும் பெண்டிரும் இளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்கு தீபம் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்திலேறுங் கொண்டலின் வடிவின் மருகோனே
குரங்குலாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையும் அழகிய பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

ஒருமையுடனினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறு நினது புகழ்பேச வேண்டும் பொய்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டுமுனை
மறவாதிருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வினான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத்துய்ய மணியுண்முகச் சைவமணி
சண்முகந் தெய்வ மணியே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

**தொல்லை யிரும்பிறவி சூழுந்தளை நீக்கி**
**அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவாசகம் என்னுந் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் நாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகலுமா றொன்றறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ளொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாம் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமென் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுட ரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றானபி வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

– மாணிக்கவாசக சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோக சுவாமிகள் நற்சிந்தனைப் பாடல்கள்

## நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி – கிளியே!
இரவுபகல் காணேனெடி.

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி – கிளியே!
நல்லூரான் தஞ்செமடி.

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி – கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி.

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் – கிளியே!
காவல் அறிந்திடெடி.

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி – கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி.

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னாலெடி – கிளியே!
பொல்லாங்கு தீருமெடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் அவன் செயலே கிளியே

கண்ணிகள்

சொல்லால்வருங் குற்றமெல்லாம்
நல்லோர் பொறுத்திடுவார்
எல்லாம் அவன் செயலே – கிளியே!
ஏத்திப் பணிவோமே.

எல்லாஞ் சிவன் செயலே
எப்படியா யிருந்தாலும்
நல்ல மலரெடுத்துக் – கிளியே!
நாமேத்திப் பணிவோமே.

போக்குவர வில்லாத
பொன்னபிடியை யெப்பொழுதும்
வாக்காலும் மனத்தாலுங் – கிளியே!
வாழ்த்தி வணங்குவோமே.


காயம் அழிந்துவிடும்
காண்பனவும் ஒழிந்துவிடும்
மாயமான வாழ்வைவிட்டு – கிளியே!
மலரடியைப் பணிவோமே.

ஆன்மா அழியாப் பொருள்
அப்பொருளை அறிந்து விட்டால்
வீண்பாவ னையெல்லாம் – கிளியே!
வெந்துநீ றாய்விடுமே.

பொறிவழியே போயலையும்
பொல்லாம னத்தைவென்றால்
அறிவறி யாமைவிட்டுக் – கிளியே!
அரன்பதம் சேர்ந்திடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தன் வழியைப் பின்பற்றி முத்தமகள் சட்டத்தரணியாக
சத்தியப் பிரமாணம் செய்த பின் குடும்பத்தினருடன்.

கொழும்புத் தமிழ் சங்கத்தில் உரையாற்றும் போது.



சட்டக்கல்லூரி தமிழ் மன்ற விழாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவன்.....

1. தன்னை தனக்குள் மறைத்து வைத்துத்,

தான் பேச வேண்டிய விடயத்துத் தான் தன்னைப்பற்றி எதுவும் பேசாது, மற்றவர்கள் தங்கள் தங்கள் மங்கலங்கன்ளை கூறவிட்டு அவற்றைப் பார்த்துக் கேட்டுத் தன் மகிழ்ச்சிப் புன்னகையை முகம் நிறையக் காட்டி,

அவற்றுக்கும் மேல் தான் பேச வேண்டுமென்று வரும்பொழுது, கலகலப்பை பரக்க விதைத்து இன்முக அறுவடையை செய்து,

வாழ்ந்து வந்த ஒரு ஜீவன் தன் ஆத்மாவின் கருத்தாளம், மிக்க மௌனத்தை, தனது உடலுக்கும், உரியதாக்கி தன்னுள் தான்

கரைந்துவிட்டது, கலந்துவிட்டது.

தான் பிறருக்குச் செய்த நன்மைகளை அன்றனறே மறந்துவிட்டு, தான் செய்ய முடியாது போனவற்றுக்காக மன்னிக்குமாறு கேட்பதையே தன் இயல்பாகக் கொண்டு வாழ்ந்து வந்த ஒரு மனிதன், தன்னுள் தான் ஒடுங்கிவிட்டான்.

இரத்தினநாதன் என்று பால்ய கால நண்பர்களாலும் இரத்தினதுரை சிவகுருநாதன் என உத்தியோகபூர்வமாகவும் தினகரன் சிவகுருநாதன் எனத் தமிழ் கூறும் நல்லுலகாலும் அறியப்பட்ட அந்த மனிதன் இன்று இல்லை.

வேண்டி நிற்கும் மனிதர்களின் தேவைகளை நிறைவேற்றும் மனிதாயத ஓட்டங்களினூடே, தன் மனம் நிரப்பி வைத்திருந்த குடும்ப பாசத்தை துணைவியார் பற்றிய தன் அந்தரங்க நேசத்தை, தன் மகள்மார் பற்றிய இன்பப் பெருமிதத்தை, தன் மகன் பற்றிய பாசத்தைத் தனக்குள்ளேயே வைத்து, வைத்து மென்று சுவைத்து, ஆனால் புறத்தின் அவசரங்கள் காரணமாக தன் அகநிறைந்த துய்ப்புக்களை வெளியே காட்டிக் கொள்ள விரும்பாத ஓர் அற்புத குடும்பஸ்தனை, நாம், நமது சமூகம் இழந்து நிற்கின்றது.

2. சிவகுருநாதனுக்கும் எனக்கும் 54 வருடகால நட்பு. 1949இல் சாஹிறாவில் (கல்லூரியில்) ஏற்பட்ட சந்திப்பு சுகவீனமுற்றிருந்த காலமும் "சிவதம்பிக்கு சொல்லுங்கள்" என்று சொன்னதை நினைத்து, அவன் மகள் கீதா, 54 வருட உறவின் அறுகையைத் தெரிவித்தார். யார் யார் எல்லாம் என் மறைவு பற்றி எழுத வேண்டும் என்று எனக்குள் கணக்குப் போட்டு வைத்திருந்தேனோ, அவர்களில் இரண்டாவது ஆளும் தான் செய்ய வேண்டிய பணியை என்னுடையதாக்கிவிட்டுச் சென்றுவிட்டான். இந்தச் சோகத்துள்ளும் அவனது கண்களின் குறும்புச் சிரிப்புத் தெரிகிறது.

சிவா

• எங்களை மாத்திரமல்ல காலத்தையும் வெல்பவன். அந்த ஆற்றல் கொண்டவன்............

3. சிவகுருநாதன் என்பது உண்மையில் தகப்பனின் பெயர். இரத்தினநாதன் என்பதுதான் உண்மையான இயற்பெயர். ஆனால் உத்தியோகபூர்வ பதிவில் இரத்தினதுரை என்றே இருந்தது. பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் பிற்கூற்றில் இரத்தினதுரை தன் தகப்பன் பெயரியே தன் வழங்குபெயர் ஆக்கினார். யாழ்ப்பாண கந்தர் மடத்தின் பூர்வ குடும்பத்தினுள் ஒன்றின் வழிவந்த இவரின் அம்மா பெயர் சிவபாக்கியம். இரத்தினநாதனின் சிரிப்பு தாய்வழிச்சொத்து. மகனின் நண்பர்களை உபசரிப்பதில் தன் குடும்பத்தின் நயதக்க நாகரீகத்தை காட்டிய சீமாட்டி.

சிவகுருநாதனுக்கு சகோதரர்கள் நால்வர் சகோதரிகள் இருவர். இசை, இந்தக் குடும்பத்தின் பூர்வீக சொத்துகளில் ஒன்று. இரத்தினநாதனின் ஒரு சகோதரி திருமதி வடிவேலு இலங்கை வானொலியில் பாடியவர். இரத்தினநாதன் மிக அருமையாகப் பாடுவார். ஆழமான சங்கீதஞானம். உத்தியோக ஓய்வின் பின்னர், மார்கழி மாதத்தில் சென்னை வாசம். சிவகுருநாதனின் பலரறியாப் பக்கங்களில் ஒன்று இந்தச் சங்கீத ஞானம். இந்த குடும்பச் சொத்து இவரது பிள்ளைகளிடத்து உண்டு. "வாழையடிவாழை" தானே எமது மரபு.

4. அடுத்தது இவரது சாதனைகள் பற்றிய குறிப்பு வருவதுதான், கட்டுரையின் ஓட்டத்துக்கு சரியானது. ஆனால் நமது சமூகம் "தேச வழமை" நியமனங்களுக்கு உட்பட்டது. அதன் படிக்கு "தேடிய தேட்டத்தில்" பாதி மனைவிக்குரியது. அதாவது இயைபான மனைவி இல்லையென்றால், தேட்டங்களை ஈட்ட முடியாது. தேட்டத்துக்கான தேடல்களுக்கு வாய்ப்பு வழங்குவது வீட்டுக்கு வந்தவரின் பாக்கியம்.

1959இல் கந்தர் மடத்தைச் சேர்ந்த சிவகுருநாதன் இரத்தினதுரை, கோண்டாவிலைச் சேர்ந்த நாவலப்பிட்டி வர்த்தகப் பிரமுகர் இராஜசிங்கத்தின் மகள் தனரஞ்சிதமணியைத் (நவம்பர் 12ல்) திருமணஞ் செய்தார். சிவகுருநாதனுக்கு கிடைத்த தெய்வ வரங்களில் முக்கியமானது இந்த திருமணம். தன் குறுஞ்சிரிப்பால் குடும்பத்தின் நேர்பாதையை நிர்ணயம் செய்தவர் இவர்.

மாலதி, கீதா, விஷ்ணுவர்த்தன் ஆகிய மூவரும் இந்த மனை மாட்சியின் பேறுகள்.

மாலதி ஒரு சட்டத்தரணி, கீதா கணக்காளர், விஷ்ணுவாத்தன் கணக்காளர். மாலதி திரு அருணாசலம் திருக்கேதிஸ்வரனையும், கீதா திரு சின்னத்தரை மயூரனையும் மணமுடித்துள்ளனர். விஷ்ணுவர்த்தனின் மனைவியாக சுஜிந்தாவுக்கு நிச்சயதார்த்தம் செய்யப்பட்டு விட்டது.

பேரப்பிள்ளைகளையும் கண்ட பூரண வாழ்வு சிவகுருநாதனுடையது. (மதுமிதா, நிர்த்தனா, சேரமான்)

இந்தக்குடும்பத்தின் தொடர்ச்சியில் அதன் செழுமையில் சிவகுருநாதன் வாழ்ந்து கொண்டிருப்பான்.

5. இந்தப் பின்புலங்கள்தான் சிவகுருநாதன் என்ற சாதனையாளனை உருவாக்கிப்பேணியது.

இலங்கையின் நாளிதழ் வரலாற்றில் சிவகுருநாதனுக்கு அழியாத ஓர் இடமுண்டு. இவர் 1961 முதல் 1995 வரை தொடர்ந்து 34 வருடங்கள் "தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக விளங்கினார்.

இலங்கையின் பத்திரிகை வரலாற்றில் இது ஈடினையற்ற ஒரு சாதனை. இந்த வெற்றிக்கான பிரதம காரணம் சிவகுருநாதன் தன்னை முதன்மைபடுத்தாமல் தன் பணியை செய்தமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சேவையின் சிறப்பு இப்பொழுது, சிவகுருநாதன் காலமானதன் பின்னரே முனைப்புடன் தெரிய வருகிறது. இலங்கையின் பல பாகங்களில் சிவகுருநாதன் நினைவினை போற்றி, பயன் பெற்ற எழுத்தர்கள், எழுத்தாளர்கள் நினைவுக்கூட்டங்கள் நடத்துகின்றனர். சிவகுருநாதன் மறைவு வெளிவந்த வாரத்தில் தமிழ் பத்திரிகைகளில் அனுதாபச் செய்திகள் ஒவ்வொருநாளும் இரண்டு மூன்று பக்கங்களை நிரப்புனவாக இருந்தன.

சிவகுருநாதன் கொழும்பின் புலமைத் திறன்மிக்க தமிழ்ச் சட்டத்தரணிகளுள் ஒருவராக விளங்கினார். 1973இல் சட்டத்தரணியான இவர், சட்டக்கல்லூரியின் தமிழ் வழி விரிவுரையாளர்களில் ஒருவராக விளங்கினார்.

இதழியல் துறை கற்கை நெறியாகக் கொள்ளப்படும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தமிழ் வழி போதனையில் இவர் பணி முக்கியமானது. இலங்கைப் பத்திரிகைச் சபை நடத்திய இதழியல் வகுப்புகளுக்கும் இவர் விரிவுரை ஆற்றினார்.

சிவகுருநாதனுக்குள் என்றும் தேடல் தணியாத ஓர் ஆய்வு மாணவன் இருந்துகொண்டே இருந்தான். அந்த தேடல் காரணமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் துறையில் இலங்கையில் தமிழ்ப் புதினப்பத்திரிகைகளின் வரலாறு பற்றிய ஓர் ஆய்வை முதுமாணிப் பட்டத்துக்காக (M.A.) செய்தார். 1983 கலவரத்தின் பொழுது ஆய்வுக் கட்டுரை தொலைந்து போனது, தனது ஆர்வம் காரணமாக ஆய்வுக் கட்டுரையை மீட்டெழுதி 1985இல் M.A. பட்டம் பெற்றார். டாக்டர் பட்டத்துக்கான (Ph.D) ஆய்வை மேற்கொள்ள விரும்பினார்.

சட்டத்துறையிலும், ஊடகத்தறையிலும் இவருக்கு இருந்த ஆழ்ந்த அறிவு காரணமாக கலைச் சொல்லாக்க மீள் நோக்குக் குழு இவரை இந்த இரண்டு துறைகளுக்கும் நிபுணத்துவ ஆலோசகராக நியமித்திருந்தது.

தினகரன் பத்திரிகாசிரியராக சிவகுருநாதன் ஈட்டிய பெருஞ் சாதனை, எழுத்தாளர்கள் பலரை வளர்த்தெடுத்தமையாகும். சிவகுருநாதனை தத்தமது பிரதம வழிகாட்டியாக கொண்டாடும் தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் பலர் உள்ளனர்.

சிவகுருநாதனின் இச்சேவைக்கான கணிப்பாக யப்பானிய ஊடக நிறுவனம் ஒன்று இவருக்கு "முதுபெரும் இதழாசிரியர்" என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தது.

உண்மையில் சிவகுருநாதன் பார்த்த ஒரேயொரு உத்தியோகம் பத்திரிகை ஆசிரியராக இருந்தமைதான். 1956 இல் லேக் ஹவுசின் உதவி ஆசிரியராக சேர்ந்த இவர் 1959 இல் செய்தி ஆசிரியரானார். அப்பொழுது கைலாசபதி ஆசிரியராக இருந்தார். 1961இல் கைலாசபதி பல்கலைக்கழக விரிவுரையாளராகச் செல்ல சிவகுருநாதன் தினகரன், ஞாயிறு தினகரன் ஆசிரியரானார்.

இலங்கையில் இதழியல் துறையில் சிவகுருநாதனின் பெயர் நின்று நிலைக்கும்.

இதழியல் துறையில் இவர் ஈட்டிய புகழ் காரணமாக இவருக்கு இலங்கை அரசு "கலாசூரி" என்ற விருதை வழங்கியது.

தமிழ் இலக்கிய துறையில் சிவகுருநாதனுக்கிருந்த நற்பெயர் காரணமாக இலங்கை கலைக்கழகத்தின் தமிழ் இலக்கியத் துறைத் தலைவராக 1990 களின் இறுதியில் கடமையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை பத்திரிகைச் சபையின் (**Sri Lanka Press Council**) அங்கத்தவராக இவர் மூன்று வருட காலம் (1995 - 1998) கடமையாற்றினார்.

ஒய்வுக் காலத்தில், இவர் வருடாவருடம் நடைபெறும் சிறந்த இதழியல் துறையாளருக்கான தேர்வுக் குழுவில் நடுவராக கடைமையாற்றும்படி கேட்டுக் கொள்ளப்பட்டர்.

6. இதழியல் துறை, சட்டத்துறை ஆகியவற்றிலிருந்த திறமை காரணமாக சிவகுருநாதனுக்கு கிடைத்த கௌரவங்கள் பல.

முஸ்லிம் ஊடகவியலாளர் சங்கம் விசேட கௌரவம் அளித்தது.

சகல இன பத்திரிகையாளருக்கும் பொதுவான உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் (**Working Journalist Association**) தலைவராக இரண்டு தடவைகள் பதவி வகித்தார்.

இவற்றைவிட சட்டத்துறை விற்பன்னம் காரணமாக கடன் இணைக்கச்சபை (**Debt Conciliation Board**) போன்ற மன்றங்களில் கடமையாற்றினார்.

7. சிவகுருநாதனுக்குக் கிடைத்த சமூக ஏற்புக் கௌரவங்களில் மிக முக்கியமானது கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் பதவி ஆகும். கடந்த இரண்டு வருடங்களாக தலைவராக விளங்கிய அவரே தொடர்ந்தும் தலைவராக இருத்தல் வேண்டுமென சங்கத்தினர் வேண்டினர்.

8. சிவகுருநாதனின் மாணவ காலத்தைப் பற்றிய சிறு குறிப்பு அவசியமானதாகும்.

- 1948 யாழ் இந்தக்கலூரி

1949 - 1952 சாஹிராக் கல்லூரி கொழும்பு

1952 - 1955 பேராதனைப் பல்கலைக் கழகம்

சாஹிராக கல்லூரியில் தமிழ்ச் சங்க செயலாளராக (1950) விளங்கினார்.

சாஹிராவில் அவரை அறிந்த நண்பர்கள் அவரது சீவிய காலம் முழுவதும் நண்பர்களாக இருந்தனர். ஹீப்லி காசீம், மு. சபீம் பஹாவுதீன், பாலசிங்கம், சிவத்தம்பி, அஸ்வர், சிவராசா , செ. மு. ஹனிபா எனப் பலர் ஒருசாலை மாணவர்கள்.

சாஹிராவின் அதிபர் காலஞ்சென்ற ஏ. எம். ஏ. அஸீஸ் சிவகுருநாதனிடத்து பேரன்பு கொண்டிருந்தார். ஜனாப் எஸ். எம். காமார்தீன் எம். எவ். எம். பாக்கீர் முதலியவர்களை சிவகுருநாதன் நண்பர்களாகக் கொண்டிருந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிவகுருநாதன் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க இதழ் "இளங்கதிர்" என்னும் சஞ்சிகையின் ஆசிரியராக விளங்கினார். இந்து மாணவர் சங்கத்தின் இதழாகிய "இந்து தர்மம்" என்னும் இதழின் ஆசிரியராகவும் விளங்கினார். பல்கலைக்கழக மாணவ காலத்துள், ஒருவர் இரண்டு இதழ்களின் ஆசிரியராக இருப்பதும் மிகவும் அருமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுருநாதனுக்கு அந்தப் பெருமை கிட்டியது.

சிவகுருநாதன் பேராசிரியர் க. கணபதிபிள்ளையின் "உடையார் முடுக்கு" (1953) "தவறான எண்ணம்" (1964) ஆகிய நாடகங்களிலும் நடித்தார்.

பல்கலைக் கழக காலத்தின் பின்னரும் பேராசியர் கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், வித்தியானந்தன் ஆகியவருடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

9. இவ்வாறு மீட்டு நோக்கும் பொழுதுதான் சிவகுருநாதனின் மனிதாயது முதிர்வு புலப்படுகிறது.

அவனது வாழ்க்கை நமக்குப் பல பாடங்களை புகட்டுகின்றது.

என்னைப் பொறுத்தவரையில் சிவகுருநாதனிடம் காணப்பட்ட அடக்குமுடைமைதான் அவரது மிகப் பெரிய பண்பு. தன் புகழ் பேசாத மிக மிகச் சில மனிதர்களுள் சிவகுருநாதன் ஒருவர்.

சிவகுருநாதன் ஒரு பெரிய ஆலமரம் போல படர்ந்து, விரிந்து விழுது விட்டு மேலும் விரிந்து அகண்ட ஒரு வெளியைத் தனதாக்கிச் கொண்டிருந்தார். அந்த ஆலமரம் வீழ்ந்துவிட்டது. அது நினற வெளி இப்பொழுதுதான் புலனாகிறது.

இந்த வெளி எங்கள் பலரின் மனங்களில் என்றுமே நிரப்பப்பட முடியாத வெளியாகவே இருந்துகொண்டிருக்கும்.

சிவகுருநாதன் போல இன்னொரு மனித தத்துவமுள்ள சாதனையாளரை சாதனைத் திறன் நிறைந்த மனிதரைக் காண்பது கடினம்.

"வானம் அழுகின்ற சோகம்" என்பார்களே அது சிவகுருநாதன் மறைவில்த்தான் நமக்கு நிதர்சனமாகிறது.

அவனுடைய சிரிப்பு,

அவன் பாடிய பாடல்கள்,

அந்த இனிய குரல்,

எங்கள் நெஞ்சங்களையும் கண்களையும் நிரப்புகின்றன.

திருமதி சிவகுருநாதனுக்கும், மாலதி, கீதா, விஷ்ணுவுக்கும் நாங்கள் எதைச் சொல்வது!

ஒன்றே ஒன்றுதான் சொல்லலாம்.

உங்கள் இழப்பு மிகப் பெரியது.

ஏனெனில் அந்த இழப்பு எங்களையே உழற்றுகின்றது என்றால், உங்களுக்கு

அவனது உயிர் மூச்சுக்களாக இருந்த உங்களுக்கு எப்படி இருக்கும்.

துன்பம் புரிகிறது,

நன்கு புரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஒன்று இப்படியானவர்களை நமது பண்பாடு தொடர்ந்தும் மனிதர்களாகப் பார்ப்பதில்லை. அது அவர்களை தெய்வமாக காண்கிறது. தெய்வங்களை நினைக்கும் எவரும் கண்கலங்குவதில்லை. கண் கலங்கக் கூடாது.

உங்களுக்கு திருவும், சீரும் பொழியட்டும்.

இவ்விடம் சிவகுருநாதனின் நண்பன் சிவத்தம்பியுடன் அவனை தன் அண்ணனாகவே கருதிய விமலா, தங்களை அன்பு மாமனாகக் கருதிய மங்கை, கோதை, வர்த்தினி.

**01-09-2003**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் ஜனதிபதி டி.பி.
விஜேயதுங்கா அவர்களால்
கௌரவிக்கபடுகிறார்





அமைச்சர் ஏ.எச்.எம்
அஸ்வர் அவர்களால்
கௌரவிக்கப்படுகிறார்.6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் மறைவு தமிழ்ச் சங்கத்தின் இழப்பு

கொழும்பு தமிழச் சங்கத்தின் தலைவராக இருந்து தலைவராகவே மறைந்த கலாசூரி இ. சிவகுருநாதன் அவர்களின் மறைவு சங்கத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

26-10-1997 மதல் 28-06-1998 வரையும் மீண்டும் 15-07-2001 முதல் தன் இறுதி மூச்சு வரையும் அமரா் சிவகுருநாதன் எமது சங்கத்தின் தலைவராகப் பணிபுரிந்த பெரமைக்குரியவர்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பணிக்கு தன்னை அர்ப்பணித்து, தமிழ்ச் சங்கத்தின் தலைமைத்துவமே தன் வாழ்வின் இறுதி அத்தியாயமாகக் கொண்டு அமரத்துவம் அடைந்திருக்கும் திரு. இ. சிவகுருநாதனின் ஆழ்ந்த தமிழ் அறிவும் அவரின் பேச்சுத் திறமையும் அத்தலைமைத்துவத்திற்கு மெருகூட்டியிருந்தது.

தமிழ் எழுத்துலகில் தனக்கென ஒரு தனிப்பாணியை வகுத்து தினகரன் பிரதம ஆசிரியராகப் பல ஆண்டுகள் அவர் செய்த பணி, சட்டத்தரணியாகி, இலங்கைச் சட்டக் கல்லூரியில் தமிழ் மொழிமூலம் சட்ட நுணுக்கங்களை இளம் சமுதாயத்திற்கு போதித்த திறமை, பல மேடைகளில் இனிய தமிழில் சுவை பொருந்திய கருத்துக்களை உதிர்த்து சபையினரைக் கவர்ந்த சாதனை - இவை எல்லாம் அவரின் வாழ்வின் சிறப்புக்கு மகுடம் வைத்தன என்று சொல்லலாம்.

பழகுவதற்கு இனியவராக எல்லோரையும் அணைத்து உறவு கொண்டு இன்பம் கண்ட புனித உள்ளமாக அவரை நாங்கள் அறிந்து இருந்தோம்.

வாழ்வின் இறுதிக் கட்டத்தில் சங்கத்தின் பணிகளில் ஆர்வத்துடன் அவர் ஈடுபட்டு உழைத்தபோது அவரை நாங்கள் இவ்வளவு கூடிய விரைவில் இழப்போம் என்று கனவிலும் நினைக்கவில்லை. அடுத்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்ய ஆட்சிக்குழு அவரை ஒருமனதாக நியமித்த வேளையில், அவருக்கு சவால் விட்டு வேறு எவரும் நியமனம் தாக்கல் செய்ய விரும்பாத கட்டத்தில்; தலைவராகவே தலைவர் மறைந்து விட்டார். தமிழ் உள்ளங்கள் கலங்கின; இன்றும் கலங்கிக் கொண்டிருக்கின்றன. சமீப காலத்தில் ஊடகங்களின் வாயிலாக வேறு எந்த தமிழ் மகனுக்கும் கிடைக்காத அளவு ஏக்கம் மிகு அனுதாப அலைகளைக் கண்டோம். அவை அமரரின் பெருமைக்குச் சான்று பகிர்ந்து நிற்கின்றன.

அமரரின் அருமைத் துணைவிக்கும் பிள்ளைகளுக்கும் ஏனைய உறவினர்களுக்கும் அமரரின் மறைவு தமிழ்ச் சங்கத்தின் இழப்பு என்று கூறி, அவர்களின் துயரத்தில் நாங்களும் பங்கு கொண்டு தமிழ்ச் சங்கத்தின் சார்பில் அவர்களுகஃகு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இறுதியாக, தனிப்பட்ட முறையிலும் நான் சில வார்த்தைகளைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். 26-10-1997 அன்று நடந்த பரபரப்பான ஆண்டுப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுக்கூட்டத்தில் அமரர் திரு. இ. சிவகுருநாதனை ஏகமனதாகத் தலைவராகத் தமிழ்ச் சங்கம் தெரிவு செய்தபோது அக்கூட்டத்தில் தற்காலிகத் தலைவராகக் கடமையாற்றி அமரரின் தெரிவைப் பிரகடனப்படுத்திய நிகழ்வு என்றும் மறக்க முடியாதது. இப்பொழுது அவரின் மறைவின் பின் அடுத்த ஆண்டுப் பொதுக்கூட்டம் வரை, அவர் விட்டுச் சென்ற தலைமைப் பதவியில் எதிர்பாராத முறையில் அமர வேண்டிய நிலையும் எனக்கு ஏற்பட்டிருக்கின்றது. சட்டக் கல்லூரி மாணவனாக இருந்த காலந்தொட்டு அமரரின் அன்பில் தோய்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பல கட்டங்களில் எனக்கு உற்சாகம் தந்து ஓர் அண்ணன் போன்று கை கொடுத்துத் தூக்கிவிட்டவர் அவர். என்னைப்போன்று பலர் அந்த நல்ல உள்ளத்தின் அன்பில் தோய்ந்திருக்கின்றார்கள். எனவே, அப்படியான தம்பிமார்களில் ஒருவராகவும் அமரருக்கு என் தனிப்பட்ட அஞ்சலியையும் செலுத்தி அவரின் குடும்பத்தினருக்கும் எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**28-08-2003**

**கந்தையா நீலகண்டன்**
தலைவர்,
கொழும்பு தமிழச் சங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. இ. சிவகுருநாதன் அவர்கள் ஈர நெஞ்சினர்.....

சென்ற நூற்றாண்டின் இறுதிக்காலம் இலங்கையின் முக்கிய சம்பவங்களை உள்ளடக்கிய காலமாகும். பத்திரிகை உலகமும் மிகவும் வளர்ச்சி அடைந்த காலம் இதுவாகும். ஏரிக்கரையில் இருந்து வெளிவந்த பத்திரிகை உலகில் ஒரு ஜாம்பவனாகத் திகழ்ந்தவர் தினகரன் பிரதம ஆசிரியர் திரு. இரத்தினதுரை சிவகுருநாதன் அவர்களாவர். பண்டிதர் வீ. கே. பி. நாதன், பேராசிரியர் க. கைலாசபதி முதலானவர்களும் தினகரனை ஒளிவீசச் செய்த பிரதம ஆசிரியர்களே. அவர்களது மரபு வழியைப் பின்பற்றி, தினகரனை மேலும் வளரச் செய்த பெருமை திரு. சிவகுருநாதன் அவர்களுக்குரிய தனிச்சிறப்பாகும். சாதி, மத, இனப் பூசல்களிடையே சிக்காத ஒரு புதிய பாதையில் அவர், பத்திரிகைத் துறையில் ஈடுபட்டதே அவரது பெரு வெற்றியாக அமைந்துவிட்டது. அதனால் அவரது சேவை லேக்ஹவுஸில் நீண்டது. தினகரன் பத்திரிகையை வளர்த்த அவர் அதே நேரத்தில் தன்னையும் வளர்த்துக் கொண்டார். சிறந்த சட்டத்தரணியானார். எம். ஏ. பட்டதாரியுமானார்.

1951இல் சென்னைத் தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் ஆதரவில் பரமேசுவராக் கல்லூரியில் தமிழ் விழா நடந்தது. சைவாசிரிய கலாசாலைப் பேராசான் பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழ் என்ற தலைப்பில் உரையாற்றினார். 13.05.1951 ஞாயிறு தினகரனில் 'தமிழ்சாறு' என்ற தலையங்கத்தில் பண்டிதர் அவர்களது பேச்சு வளம் குறித்து எழுதிய தினகரன் ஆசிரியர் திரு. வீ.கே.பி. நாதன் அவர்கள், பண்டிதர் சி.க. அவர்களைப் 'பண்டிதமணி' அவர்கள் என்று உலகுக்கு அறிமுகஞ் செய்து வைத்தார்

கால் நூற்றாண்டு கழிந்து 22-03-1987 ஞாயிறு தினகரனில்,

"குருவின் தாள் போற்றும்

ஆசிரியமணி பஞ்சாட்சரம்"

என்று ஆசிரியத் தலையங்கம் எழுதி, எனது பெயருக்கு முன்னே ஆசிரியமணி என்ற விருதினை உலகில் நிலைக்க வைத்தவர் தினகரன் பண்ணையில் வளர்ந்தவரான திரு. இ. சிவகுருநாதன் அவர்கள்.

தன்னை நாடுபவர்களுக்கு நல்வழிகாட்டுவதுடன் கைதூக்கி விடுகின்ற பண்பும் திரு. சிவகுருநாதன் அவர்கள் பிறவிச் சொத்துகள் - சைவத்தமிழ்ச் சிந்தனையாளராக உரும்பராய் செ. தனபாலசிங்கன் அவர்களைத் தினகரன் மூலம் உலகில் ஒளிவீசச் செய்த பெருமையும் திரு. இ. சிவகுருநாதன் அவர்களையே சேரும். இவ்வாறு உதாரணத்துக்குப் பலரை எடுத்துக் காட்டலாம்.

தினகரனில், பண்டிதமணி அவர்களுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டது. தினகரனில் பண்டிதமணி அவர்கள் எழுதிய கட்டுரைகளே பெரும்பாலும் நூலுருவம் பெற்றன. "தினகரன் பண்டிதமணி அவர்கள்" என்று சொல்லுமளவுக்குப் பண்டிதமணி சி.க. அவர்கள் பெயர் பிரபலமாயிற்று. இத்துறையில் தினகரன் பிரதம ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதன் அவர்களும் தினகரன் ஞாயிறு பதிப்புக்குப் பொறுப்பாளராக இருந்த எம்.ஆர். சுப்பிரமணியம் அவர்களும் போற்றுதற்குரியோராவர்.

யாழ்ப்பாணத்தில் கந்தர்மடம், கொழும்புத்துறை ஆகிய பகுதிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்களான அன்பர் திரு. இ. சிவகுருநாதன் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத்துறைத் தவமுனிவர் யோகசுவாமிகளிடம் முறுகிய பக்தி கொண்டவர். சுவாமிகளின் நற்சிந்தனைகளை எழுத்தெண்ணிப் படிப்பதுடன், மற்றவர்களுக்கும் சந்தர்ப்பம் வாய்க்கும் நேரங்களிற் போதித்தும் வந்தார்.

உலகத்துக்குக் கருத்தா சிவபெருமான்; அவரே முழுமுதற் கடவுள்; சிவபெருமானை வழிபடுகின்றவர்கள் சைவர்கள்; சைவர்களின் சிவசின்னங்கள் வீபூதி, உருத்திராக்கம் என்ற நாவலர் கொள்கையில் நிறைந்த நம்பிக்கை உடையவர். திரிகரண சுத்தியுடன் பேணியும் நடந்தவர் திரு. சிவகுருநாதன் அவர்கள்.

ஆறு அடி உயரமானவர், வாட்ட சாட்டமான உடம்பு, எட்டுமுழ வேட்டியை இரண்டாக மடித்து கட்டுவார்; தூய்மையான மேலங்கி; தோளில் அங்க வஸ்திரம்; நெற்றி நிறைய நீறு; இது அவருக்கே உரிய கோலம். பென்னம்பெரிய மகாநாடுகளாயினும் சரி, இலக்கியம் சார்ந்த கூட்டங்களாயினும் சரி, பல மதத்தவர்கள் ஒன்று கூடும் வைபவமாக இருந்தாலுஞ் சரி இதே கோல உடைதான். சாலை வழியே செல்லுகின்ற போது ஆசானுபாகுவாகவே காட்சி தருவார்.

மகா நாடுகளுக்குத் தலைமை வகித்தாலென்ன?, உரையாற்றினாலென்ன? அவரது சொல்லுக்கு ஒரு மவுசு இருக்கும்! கம்பீரமாக எழுந்து நின்று கனீரென்ற குரலில் பேசுவார். கலகலப்பாகப் பேசுவார். கருத்தாழத்துடன் பேசுவார். 'பொடி' வைத்தும் பேசுவார். இவரது ஒவ்வொரு சொல்லையும் கேட்டுச் சபை குதூகலிக்கும்!

விருந்தோம்பலில் வெகு சிரத்தை காட்டுபவர். அன்னவரது இல்லம் நாடி யாராவது சென்றுவிட்டால் "உண்ணீர், உண்ணீர்" என்று நன்கு உபசரிப்பார். விருந்தினரை வரவேற்று உபசரிப்பதில் திரு. சிவகுருநாதனுக்கு அவரது மனைவியார் சிறிதும் சளைத்தவர் அல்லர்.

தன்னுடைய மொழியை, மதத்தை, மக்களை மிக மிக நேசித்தவர்; ஈரநெஞ்சினர்.

ஆசிரியமணி,
**அ. பஞ்சாட்சரம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் ஜனதிபதி
ஜே. ஆர். ஜயவோர்தனாவுடன்



இன்றைய பிரதம மந்திரி ரனில்
விக்கிரமசிங்கவுடன்.



முன்னாள் நீதிஅமைச்சர்
ஜீ.எல். பீரிஸ் அவர்களுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The passing of a giant

R. Sivagurunathan, the retired Editor of the 'Thinakaran' who died Aug. 09 was an institution in Sri Lankan journalism.

He should very well hold the record for editing the same newspaper for over three decades but the mere fact is immaterial. What separated 'Siva,' as everybody called him, from the common herd of journalists and even editors was the colourfulness of his personality, the buoyancy of spirit which he brought to the run-of-the-mill work of editing a newspaper for a full seven days of the week ('Thinakaran' being both a daily and a Sunday).

Siva was a monumental man both in stature as well as personality. Big-made, broad-shouldered and swarthy he was a giant of a man both as man and editor. He was also totally fearless. Many are the times when I have seen and admired the sight of Siva confidently destriding the pavements of Wellawatte (where he lived) with the marks of 'vibudi (the Hindu holy powder) liberally evident on his broad forehead. And this even at the height of the attacks on the Tamil community in that very heartland of the Tamil middle-classes of Colombo.

As Editor of 'Thinakaran,' the Lake House Tamil newspaper, Siva inherited the traditions set by the late Professor K. Kailasapathy who made the transition from the corridors of Lake House to the groves of academe. Since then Siva had a ringside view of national politics from both sided of Sri Lanka's tragic communal divide which is almost threatening to be that permanent 'cadjan curtain' of journalistic cliche. He has watched the coming and goings of Presidents and Prime Ministers, Cabinet Ministers and lesser political mortals, Tamil leaders of all complexions and hues and himself went on and on until the retirement rules caught up with him.

A lawyer by training who was also an external lecturer at the Law College the most outstanding trait of Siva as an editor was his sharpened sense of realism. He knew exactly what he could do and could not do, the range of possibilities open to him and the limits confining him.

It was this resilience and flexibility which made it possible for him to remain at the helm of his newspaper for decades, spanning the days of private ownership under Wijewardenes and the days of Government-management which included the Premiership of Mrs. Sirimavo Bandaranaike and the Presidencies of Masers J. R. Jayewardene, R. Premadasa and D. B. Wijetunga and finally that of the present President during whose tenure he retired. Knowing well his possibilities and limits he never went in for the grandiose gesture or the bravura performance but was a professional to his fingertips.

Siva also had a fine sense of humour. For long a pillar of the Sri Lanka Working journalists' Association (of which he was Treasurer and the only Tamil to be elected its President) I remember how often he used to diffuse potentially explosive situations at its Annual General Meetings with a single wisecrack. Asked for the secret of his diplomacy he replied that he had learnt it at Hall elections at the Peradeniya University in those halcyon 1950s now erased forever.

On another occasion addressing a seminar organised by the alumni association of a German academy whose second name closely resembled Carlsberg Siva said that he did not know anything about this seminar but had come on the invitation of a friend thinking that he could have a glass of Carlsberg beer!

In retirement Siva did some practice before the Rent Tribunals and beetrode the pavements of Wellawatte with the same old confidence. Only a few knew that he was fighting a terminal illness which has now finally laid low this giant of a man. With his death passes off a substantial part of not merely tamil journalism but also that of journalism in general and the political history of a country still struggling with itself although Siva is now at rest free of all travails.

**Ajith Samaranayake**
**Daily News**
12 August 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Journalism says to veteran Editor Siva - 'Nandri'

The death of R. Sivagurunathan, retired Editor of the 'Thinakaran', the Lake House Tamil news paper, removes from Sri Lanka's newspaper landscape one of its most senior editors and major figures. 'Siva' as he was known to all, edited the 'Thinakaran' for 33 years, straddling the period of private ownership and Government control, both under the SLFP, UNP and PA Governments, until he was compelled to put aside his pen.

It was the Wijewardenes, the founders of Lake House, who saw the need for a Tamil national newspaper in a country where three language were spoken (Tamil being the language of the Muslim community as well) and where the forging of bonds between the communities was a prime need of post-Independence times. The monumental 'Thinakaran' editor was K. Kailasapathy, who deserted journalism for academia and whose early death robbed Sri Lankan Tamil letters of one of its most brilliant scholars. Stepping into Kailasapathy's sandals was no easy task but Siva did it with typical eclat. Portly in appearance and with a commanding presence, Siva also had a superb sense of fun and was nobody's puppet. He was entirely loyal and committed to any administration for which he worked but that was not because of any timidity or servility on his part but because of his fine sense of pragmatism. He knew the ranges and constraints under which an Editor had to work in a country where the newspapers were owned either by Editor had to work in a country where the newspapers were owned either by private owners or the Government and operated within that area to the best of his ability and to the satisfaction of his readers. Once he was asked at a meeting of Editors by the then newly appointed Chairman of Lake House Lionel Fernando (In the first flush of Chandrika Kumaratunga becoming Prime Minister in 1994) how he (Siva) operated as an Editor, drew up policy and handled the issues of the day. Fernando obviously expected a serious answer from this most senior editor but Siva merely said with his usual chuckle, 'It my Chairman asks me to jump out of this window (he was seated near one) I just do it. 'Everybody burst out laughing, thinking that this was one of Siva's typical witticisms but that comment held all that had to be said about the stifling effects of Government control of the media (under whatever political dispensation).

A lawyer and visiting lecturer at the Sri Lanka Law College, Siva was Treasurer of the Sri Lanka Working Journalists' Association and it was a testament to his immense popularity and standing in the profession that he was the only Tamil to be elected its President and that too at a time when communal feelings were sharpening. In recent years Siva also served as judge for the Editors' Guild Journalism Awards programme.

A big-made man with a large heart, Siva was proud to be a Tamil but did not trap himself in his Tamilness alone. He had a large vision for his country and gave his entire life to the cause of decent national journal journalism. Both the profession and Sri Lanka are the poorer by his loss.

**Karthik - Sunday Times - 10th August 2003**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தனக் கட்டை போல் தேய்ந்து மணம்பரப்பிய சிவாவின் வாழ்வியல்புகள்

(செல்லப்பா நடராசா – தலைவர், பரிப்பாலன சபை நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவில், கோண்டாவில்.)

திருஞான சம்பந்தர்ப் பெருமான் திருநீற்றுப் பதிகத்தில் 'சுந்தரமாவது நீறு' என்று பாடி அருளினார். சிவாவில் அந்தச் சுந்தரம் என்றும் மிகுந்திருந்தது. ஜனாதிபதி மாளிகை வைபவங்களுக்குச் செல்கையிலுஞ்சரி அல்லது இஸ்லாமியர்களுடைய மகாநாடொன்றிற்குப் போகையிலுஞ்சரி அவரது நெற்றியில் திருநீறு மூன்றாம் பிறை போலத் துலங்கத் தவறமாட்டாது. இந்த அழகைப் பிற மதத்தவர்களே நன்கு அனுபவித்துப் பேசியதைப் பல சந்தர்ப்பங்களில் யான் செவிமடுத்ததுண்டு. இதற்கெல்லாம் அவர் யோகர் சுவாமிகளுடன் சிறு பராயத்தில் பழகியதும் அவரது ஆசி பெற்றதுமே காரணமாகும். யோகர் சுவாமிகளது செல்வாக்கு சிவாவிடம் மிகுந்திருந்தது.

சந்தனக் கட்டையானது தான் தேய்ந்து மற்றவர்களை நறுமணம் கமழச் செய்வது. அமரர் சிவகுருநாதனின் வாழ்வியல்புகளும் அவ்வாறே எனலாம்.

## தினகரனில்

1954 ஆம் ஆண்டில் யான் தினகரனில் இணைந்து கொண்டேன். ஒரு வருடத்தின் பின்னர் சிவாவைத் தினகரன் தன்னுடன் இணைத்துக் கொண்டது. பேராசிரியர் க. கைலாசபதியும், த. சபாரத்தினமும் தொடர்ந்து தினகரனில் சேவைக்கு அமர்த்தப்பட்டனர். இன்றைய மாண்புமிகு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களது தந்தையார் எஸ்மன் விக்கிரமசிங்க அவர்களே எங்கள் நியமனங்களுக்கெல்லாம் காரணமானவர். அன்றுமுதல் தினகரனில் நாங்கள் அனைவரும் ஒரே குடும்பத்தினரைப் போலப் பழகினோம். வாழ்ந்தோம். மகிழ்ந்தோம். அந்த நாட்கள் மிகமிக இனியவை.

1961 ஆம் ஆண்டு வாக்கில் பேராசிரியர் கைலாசபதி பல்கலைக்கழக விரிவுரையாளராகச் செல்ல சிவா தினகரன் ஆசிரியரானார். யான் பாராளுமன்றத்தில் ஹன்சாட் அறிக்கையாளராக நியமனம் பெற்றுச் சென்றுவிட்டேன். இருப்பினும் எங்கள் நட்பு மிக நெருக்கமானதாகவே என்றும் இருந்து வந்துள்ளது.

## நன்றி உணர்வுகள்

கடந்த ஐந்து தசாப்த கால நட்பில் யான் சிவாவிடமிருந்து அறிந்தவைகள் பல. அவர் என்னிடம் மனம் விட்டுப் பேசிய சங்கதிகள் பலநூறு. அவர் உறவினர்கள் மேல் வைத்திருந்த பற்றும் பாசமும் நன்றி உணர்வும் அளவிட முடியாதவை. சிறுவனாக இருக்கையில் தனது குஞ்சி ஐயாவின் சால்வையைக் கட்டிக்கொண்டு யோகர் சுவாமிகளின் பிரார்த்தனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாபாவின் பிறந்ததினவிழாவில் சொற்பொழிவாற்றுகின்றார்



2001 இல் தமிழ்நாடு இசைவிழாவிற்கு சென்றபோது



விருதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டங்களில் பங்குபற்றிய செய்திகளைக் கூறி மகிழ்ந்திருக்கிறார். அந்த மகிழ்ச்சியில் குஞ்சி ஐயா சால்வையைக் கொடுத்து உதவியமைக்கான நன்றியுணர்வும் வெளிப்படும். தமது தாயார் எவ்வளவு அர்ப்பணிப்புடன் தங்கள் எல்லோரையும் வளர்த்தெடுத்தார் என்ற வரலாறுகளைக் கதை கதையாகக் கூறி இன்புற்றிருக்கிறார். அப்பொழுது தாயின் மேற் பாசமும் நன்றி உணர்வும் பக்தியும் பளிச்சிடக் கண்டிருக்கிறேன். தான் படித்து ஆளாவதற்கு உதவிகள் செய்த உறவினர்கள்அத்தனை பேரையும் நன்றியுடன் நினைவு கூர அவர் என்றுமே தவறியதில்லை.

## தியாக வாழ்வு

சிவா அவர்களுடைய வாழ்வில் தியாகங்கள் பல நிறைந்திருந்தன. முதலில் தனது உற்றார் உறவினர்களுக்காகத் தன்னைத்தானே சந்தனக் கட்டையாகத் தேய்த்துக்கொண்டு வாழத்தொடங்கினார். பின்னர் பத்திரிகையாளராக அவர் அரை நூற்றாண்டு காலம் சேவை செய்த போது அந்தப் பெருமைகள் மிகு தொழிலுக்காகத் தன்னைச் சந்தனக் கட்டையாக்கிக் கொண்டார். தன்னில் விசுவாசம் மிக வைத்திருந்த அரசியல் தலைவர்களுக்காகவும் சந்தனமாக அரைபட்டவரும் அவரேதான். நண்பர்கள் எழுத்தாளர்கள் புத்திஜீவிகளுக்காகவும் தேய்ந்து நறுமணம் கொடுக்கவும் அவர் தவறியதில்லை. கொழும்புத் தமிழ்ச் சங்கப் பணிகளுடன் தானும் தேய்ந்து மணம் பரப்பினார்.

## சொத்து சுகம் தேடாதவர்

உறவினர்கள், நண்பர்கள், எழுத்தாளர்களுடைய எந்த வைபவத்திலும் வெறும் கையுடன் கலந்து கொள்ளும் பண்பு அவரிடம் என்றுமே இருந்ததில்லை. இந்தச் சீரிய பண்பினாலும் அவர் தேய்ந்தே வாழ்ந்து காட்டினார். ஜனாதிபதி மாளிகைவரை பழகிய சிவா சொத்து சுகம் மாடமாளிகை வாகனம் என்று எதையும் தேடியவரல்லர். மரணம்வரை அவர் ஏதோ ஒரு வகையில் சந்தனக் கட்டை போலவே தேய்ந்து வாழ்ந்தார் என்றே கூற வேண்டும். சிவாவைப் பற்பல கோணங்களில் நோக்க முடியுமாயினும் அவரை யான் முதலில் ஒரு சந்தனக் கட்டையாகவே நோக்குகின்றேன். அவர் பரப்பிய நறுமணம் பல்லாண்டுகளுக்குக் கமழ்ந்து கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)


| தலைவர் | பொதுச்செயலாளர் | கௌரவ பொருளாளர் |
|---|---|---|
| வி. கயிலாசபிள்ளை | கந்தையா நீலகண்டன் | வே. கந்தசாமி |
| தொலைபேசி : 2575566 ( இல்லம்) 2448024 (அலுவலகம்) | தொலைபேசி : 2580807 ( இல்லம்) 2334949 (அலுவலகம்) | தொலைபேசி :2586620 (இல்லம்) |
| தொலைநகல்: 2575472 | தொலைநகல்: 2445255 | |
| மின் அஞ்சல்: hariomak@eureka.lk | மின் அஞ்சல்: neela@sri.lanka.net | |


28-08-2003

## அஞ்சலி......

கலாசூரி திரு. இ. சிவகுருநாதன் அவர்களின் மறைவு இந்து சமுகத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முகாமைப் பேரவை உறுப்பினராகவுள்ள திரு. சிவகுருநாதன் மாமன்ற வெளியீடுகள் குழுவின் தலைவராகவும் கடமையாற்றி மாமன்றக் காலாண்டிதழ் "இந்து ஒளி"யினை வெளியிட ஆரம்ப காலத்தில் பலவழிகளிலும் உதவி புரிந்து, ஆலோசனைகளை வழங்கிய பெரியார்.

அவர் சைவசமயத்தில் மிகவும் ஈடுபாடும் அறிவும் கொண்டிருந்தார். பல மேடைகளில் சுவாரசியமாக உரையாற்றி சபையினரைக் கவர்ந்து தன் கருத்துக்களை அவர்களின் மனதில் பதிப்பதிலும் வல்லவராக விளங்கினார்.

அமரர் சிவகுருநாதனின் மறைவால் வாடும் அவரின் குடும்பத்தினருக்கு மாமன்றத்தின் சார்பில் ஆழ்நத அனுதாபங்களைத் தெரிவித்து, அவரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து வழிபட்டு நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**வ. கயிலாசபிள்ளை**
தலைவர்



தலைமையகம் : இல. 91/5 சேர். சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை கொழும்பு - 2 இலங்கை.
தொலைபேசி : 434990 தொலைநகல் : 344720

ALL CEYLON HINDU CONGRESS
(Federation of Hindu Religious Associations and Trusts in Sri Lanka)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 07 . 10 . 1931 | 09 . 08 . 2003 |

## அமரர் கலாசூரி. இ. சிவகுருநாதன் ஐயா
## (சட்டத்தரணி)
## விரிவுரையாளர் - இலங்கைச் சட்டக் கல்லூரி

**பெருமதிப்பிற்கும் பேரன்பிற்குமுரிய எமது விரிவுரையாளர் கலாசூரி.இ. சிவகுருநாதன் ஐயா அவர்களின் மறைவுக்கு சட்ட மாணவர்களின் கண்ணீர் அஞ்சலி.**

நீங்கள் மரணித்துவிட்டீர்களாம்
உங்கள் கல்விக்கடல் கோர்த்த
எங்கள் விழிகள் - இன்றோ
கண்ணீரையல்லவா அஞ்சலியாக்குகிறது
நீங்கள் ஏற்றி வைத்த
ஏணிப்படிகள் இன்னும்
அப்படியே .......................
நீங்களோ எட்டாத தூரத்தில்
துடித்துப் புரள்கிறது
எங்கள் உள்ளங்கள் அத்தனையும்
மரணித்துப் போனது
மரணம் தான்
இதோ நீங்கள் இப்போதும்
வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்
எங்கள் இதயங்களிலும்
அத்தனை உள்ளங்களிலும்

எம் இனிய ஆசானே
சிலர் பேசப்படுவார்கள்
சிலர் பேசப்பட்டுக்கொண்டிருப்பார்கள்
நீங்களோ தேடப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள்
மரணம் தோற்ற
அத்தனை கணங்களிலும்
உங்களோடு
உங்கள் நினைவுகளோடு
கூடித்திரிந்த உங்கள்
மாணவர் உணர்வுகளில் - எப்போதுமே
நீங்கள் தேடப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள்
தோற்றுப் போனது
மரணம் தான்
எங்களுக்கு ஏணிகள் தந்த
எங்கள் கல்விச் செம்மலே
தோற்றுப்போனது மரணம் தான்

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
சட்டமாணவர் இந்து மகாசபை
இலங்கைச் சட்டக் கல்லூரி
கொழும்பு – 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Prays from Mathumitha

Dear God,

May you look down upon us. We pray that Grandpa could not suffer any further. His determination held us together. He was my grandpa who loved me, cared for me and had a place in his heart for me. He has always been a talented man with a good heart and always with a happy face. He helped many people in their livers over the years, including the cat pussy with the fresh, very smelly fish. I've always looked up to him as he was my grandfather alive. But as life passes on everybody on this planet has there own special to be born to our world and die from all this. God has chosen an earlier time for Grandpa as he is a man who has performed good karma throughout his life, been a brilliant example to the rest of us in his life and God wants him to return back to where he started off and merge peacefully into divine, spiritual way of God. No sufferings will affect him. Grandpa you have been an ideal in my life. You shall be dearly missed. Rest in peace Grandpa.



**With his wife, Grand Daughters Mathumitha and Nirthana when travelled in Africa in 2001.**

மனைவியுடனும், பேரப்பிள்ளைகள் மதுமிதா, நிர்த்தனாவுடன், ஆபிரிக்கா சென்ற போது – 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A THANK YOU NOTE TO EVERYONE

This small note brings to one and all the sincere heartfelt appreciation of the bereaving family of late Mr. 'KALASURI' Sivagurunathan affectionately known to his friends and colleagues as 'SIVA' and to his followers and students as 'AIYA'.

We were overwhelmed by the response to news of his demise reported in the media. When thousands personally visited to pay their respects and offer their condolences many telephoned and spoke to our family. Hundreds sent messages by written word accompanied by floral tributes. We were consoled by the recognition afforded to him by our Honourable president with her message and flowers. It was an honour to receive personal messages from the Prime Minister's office and from many Ministers and Parliamentarians, The Rt. Hon. Mayor of COLOMBO, ex Mayors and many learned colleagues of his profession.

Many a friends or relative were kind enough to stay on with us at home and organize and supervise the various procedures. Quite a few had sent food. Representatives from many clubs and associations where he had been active had printed and distributed leaflets and produced banners praising his virtues. They went on to honour him by orating brief speeches at the crematorium. We also thank all of those who has kindly wrote messages in the condolence book to console us at this time.

The Police Department was exemplary in controlling traffic around our residence and providing escort and pilot cars for his last journey.

We also thank those who attended the $31^{st}$ ceremony and prayers.


It will be impossible to thank everyone individually and in person and we pray that this short note is accepted as our sincere appreciation.

**Thanking you all**

**The Sivagurunathan Family**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Leela Press (Pvt) Ltd. Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org